# மானுடமைய இறையியற் செல்நெறிகள்




யோ. கி. போல் றொகான்

| | |
|---|---|
| ஆசிரியர்: | அருட்கலாநிதி யோ.கி. போல் றொகான் |
| மொழி: | தமிழ் |
| விடயம்: | இறையியல், மானுடவியல், மெய்யியல் |
| முதற் பதிப்பு: | 2021 |
| பக்கங்கள்: | xvi + 143 |
| வெளியீடு: | நல்லாயன் நிலையம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்) திருநெல்வேலி |
| உரிமை: | வெளியீட்டாருக்கு |
| அச்சகம்: | ஜே. எஸ். அச்சகம், பண்டத்தரிப்பு |
| விலை: | ரூபா 300/- |
| ISBN: | 978-624-96945-2-1 |


**Anthropocentric Theological Trends**


| | |
|---|---|
| Author: | Rev. Dr. J.C. Paul Rohan |
| Language: | Tamil |
| Subject: | Theology, Anthropology, Philosophy |
| First Publication: | 2021 |
| Pages: | xvi + 143 |
| Publisher: | Good Shepherd Centre (Catholic Chaplaincy of the University of Jaffna) Thirunelvely |
| Copy Right: | To the Publisher |
| Printer: | J.S. Printers; Pandatharippu |
| Price: | Rs. 300/- |
| ISBN: | 978-624-96945-2-1 |

# முகவுரை

கிறிஸ்தவ வரலாற்றில் ஏறத்தாள இருபதாம் நூற்றாண்டு வரை இறையியல் கற்கையின் மையமாக 'இறை' என்ற கருத்து மேலாதிக்கம் செலுத்தியிருந்தது. அக்காலத்தில் உருவான இறையியல் சிந்தனைகள் கோட்பாடுகள் (dogma) சார்ந்தவையாக அமைந்திருந்தன. திரு அவையின் படிமத் தலைமைத்துவம் உருவாக்கிய கோட்பாடுகளே இறையியலின் ஆரம்பப்புள்ளியாகவும் நிறைவாகவும் காணப்பட்டன. இக்கோட்பாடுகளுக்கு மாற்றுக் கருத்துக்கள் உருவாகியபோது அவற்றைக் களையெடுக்க பொதுச்சங்கங்கள் கூட்டப்பட்டு, திரு அவையின் திருநிலை வரையறுத்து வழங்கிய கோட்பாடுகள் ஆவணப்படுத்தப்பட்டன. அவைகள் இறைவன் வெளிப்படுத்திய உண்மைகளாக முன்வைக்கப்பட்டன. அவற்றை ஏற்றுக்கொள்வதே கிறிஸ்தவ நம்பிக்கை எனக்கருதப்பட்டது.

இவ்வாறு பலநூறு ஆண்டுகளாகத் திரு அவையில் உருவாக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்ட கோட்பாட்டு இறையியல் (dogmatic theology) பூரணமானதாக இருக்கவில்லை. அவை

பாரம்பரியங்களையும் கொள்கைகளையும் மட்டும் இறுக்கமாகப் பேணின. இறைவார்த்தையை இரண்டாம் நிலையில் வைத்துக் கையாண்டன. கிறிஸ்தவம் உள்ளடக்கவேண்டிய வாழ்வியல் அம்சங்கள் அவற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நம்பிக்கையாளரின் அன்றாட வாழ்விற்கும், அவர்களது சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் ஆன்மீகச் சூழமைவிற்கும் கிறிஸ்தவ நம்பிக்கை விடுக்கும் சவால்கள் பற்றி அதிக அக்கறை செலுத்தவில்லை. இவ்வாறு இறையியல் கடவுளைப் பற்றிய ஒரு கற்கை நெறி என்றும், கிறிஸ்தவக் கோட்பாடுகளை விளக்குவதற்கும், விரிவாக்கம் செய்வதற்கும், பாதுகாப்பதற்கும் பயன்படுவது என்ற புரிதல் பலமானதாக இருந்தது.

பதினாறாம் நூற்றாண்டில் நவீனத்துவம் அறிமுகப்படுத்திய மனித மையம் கிறிஸ்தவ இறையியலுக்குள்ளும் 'மனிதம்' பற்றிய கருத்துக்களைப் புகுத்தின. இப்பின்னணியில் இறையியலானது 'இறை' என்பதோடு மனிதத்தையும், இயற்கையையும், முழுப்பிரபஞ்ச நலன்களையும் படிப்படியாக இணைத்து ஒரு முழுமையான, ஒருங்கிணைந்த கற்கைநெறியாகத் தன்னைப் புதுப்பிக்க ஆரம்பித்தது. எனவே பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் கோட்பாடு சார்ந்த இறையியல்களோடு ஈடுபாட்டு இறையியல்களும் தோற்றம் பெற்றன. இவ்விதம் தோற்றம் பெற்ற இறையியல்கள் மனித வாழ்வின் ஒவ்வொரு நிலைகளையும் அலசி ஆராயும் தன்மை கொண்டதாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மனித வாழ்வின் பிரச்சினைகள், அடக்கு முறைகள், வன்முறைகள், ஏற்றத்தாழ்வுகள் என்பவற்றைப் பிரதிபலிப்பவையாக பல்வேறு இறையியல் சிந்தனைகள் தோற்றம் பெற்றன. உலகின் நவீனப் போக்குகளின் மத்தியில் மனித வாழ்வின் சிக்கல்களை எடுத்துக்காட்டும் கருவியாக இறையியற் சிந்தனைகள் தோற்றம்பெற ஆரம்பித்தன.

இத்தகைய இறையியலாக்கம் மனித வாழ்வியல் ஈடுபாடுகளில் இருந்து அரும்புவதாகும். ஈடுபாடு என்பது மனிதத் தேவைகளில் நேரமறிந்து கலந்து கொள்வது. அநீதி இடம்பெறும் இடங்களில் தலையிட்டு நீதியை நிலைநாட்டுவது. மூடநம்பிக்கைகள் தலைவிரித்தாடும் இடங்களில் மனிதம் மீதான,

மனித ஆற்றல்கள் - சாதனைகள் மீதான நம்பிக்கைகளைத் தோற்றுவிப்பது. சுயவளர்ச்சி, சுயலாபம் போன்ற குறுகிய நோக்கங்களுக்கப்பால் சென்று பொதுப்பணிகளில் இதயசுத்தியுடன் கலந்து கொள்வது. இத்தகைய மானுட ஈடுபாடுதான் சமகால இறையியற் செல்நெறிகளின் தோற்றுவாயாகும்.

இதன் விளைவாக சமகாலத்தில் இறையியல் என்ற கருத்தின் உள்ளடக்கம் அனைத்து மனிதாயத, சமூகவிஞ்ஞானத்துறைகளிலும் நேரடியாகவோ அன்றேல் மறைமுகமாகவோ செல்வாக்குச் செலுத்துகின்றமையைக் காணலாம். இதன்மூலம் சமகால மனிதவாழ்வு எதிர்நோக்கும் பல்வேறு சூழமைவுகள் இறையியலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இருத்தலியல் இறையியல், மானிடவியல் இறையியல், அரசியல் இறையியல், விடுதலை இறையியல், புலப்பெயர்வின் இறையியல், மனித உடலின் இறையியல் என்று பல மனிதவாழ்வு சார்ந்த பெயரடைகளுடன் இறையியல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு ‘இறை’ பற்றிய ஒரு கற்கைநெறி என்ற ஒற்றைப்பரிமாண நிலையிலிருந்த இறையியல், சமகாலத்தில் பல்பரிமாணப் பயன்பாட்டுச் செல்நெறியுடையதாக மாற்றமடைந்துள்ளது. இவ்வாறு இறையியலை ஒரு பல்பரிமாணப் பார்வைக்குட்படுத்தி, அதனை ஓர் ஒருங்கிணைந்த செல்நெறியாக உருவாக்குவது காலத்தினதும், மனிதவாழ்வுச் சூழ்நிலைகளினதும் இன்றியமையாத தேவையாகும். அப்படியான மனிதமைய ஊடுருவல்களால் உருவான பிரதானமான புதிய இறையியற் செல்நெறிகளைச் சுருக்கமாக அறிமுகஞ்செய்வதே இவ் ஆய்வின் நோக்கமாகும். இதன் மூலம் இறையியலின் பல்பரிமாண இயல்பை அதன் கடவுள் பற்றிய முன்வைப்புக்களுடனும், அது கொடுக்கும் மனிதம் பற்றிய புரிதல்களுடனும் இணைத்து நோக்கி, வரலாற்றில் அதன் அழுத்த மையங்கள் காலத்துக்குக்காலம் மாற்றமடைந்து சமகாலத்தில் மானிடமையமாக உருவானதன்மை எடுத்துக்காட்டப்படுகிறது.

***

இந்நூலுக்கு ஒரு மூத்த சமூகவியல் - மானுடவியல் பேராசிரியர் அணிந்துரை வழங்கியிருப்பது இந்நூல்

முன்வைக்கும் மானுடவியல்மைய இறையியலுக்கு ஒரு மேலதிக அர்த்தத்தையும், கனதியையும் கொடுக்கிறது. பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன் அவர்கள் சமயத்தாலும், கற்கைப்பின்புலத்தாலும் 'கிறிஸ்தவ இறையியல்' என்ற இந்நூலின் மையத்துக்கு அந்நியமானவரான தோற்றப்பாட்டை மட்டும் கொண்டுள்ளாரே தவிர தனது பன்மைச் சிந்தனைகளாலும், மானுடவியல் நிபுணத்துவத்தாலும் இந்நூலின் மையக்கருத்துக்கு அவர் மிக அருகிலேயே உள்ளார். அந்நியமானவர் போல அவர் கொடுக்கும் தோற்றப்பாடு, இந்நூலை முழுமையாகப் புறவயத்தன்மையில் எடைபோட உதவி செய்துள்ளது என்பதுவும் குறிப்பிடத்தக்கது. தனது தெளிவான சிந்தனையினாலும், கறாரான மொழிநடையினாலும் இந்நூலுக்குத் தகுந்த அணிந்துரை வழங்கியுள்ள மதிப்புக்குரிய மாண்புடைப் பேராசிரியரும், நான் சார்ந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமான என். சண்முகலிங்கன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

***

மானுடவியல்மைய கிறிஸ்தவ இறையியற் செல்நெறிகள் உள்ளடங்கும் இந்நூல் எங்களுடன் மானுடத்தை நேசித்து, ஒரு மானுடனாக வாழ்ந்து, இன்று ஒரு மாமனிதனாக தமிழர் நெஞ்சங்களில் வாழும் அமரர் அருட்பணியாளர் ம. சே. கருணாரத்தினம் அவர்களுக்குச் சமர்ப்பணமாவது இந்நூலுக்கு மேலும் அணிசேர்க்கிறது. மானுடநேயத்தைத் தனது சிந்தனைகளிலும், மானுடமையத்தைத் தனது பணிகளிலும் வெளிப்படுத்தி வாழ்ந்தவர் அருட்பணியாளர் அமரர் ம. சே. கருணாரத்தினம் அவர்கள். அவர்களின் நீங்கா நினைவுகளுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

**அருட்கலாநிதி யோ.கி. போல் றொகான்**
தலைவர்
கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
இலங்கை.